# IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No.120/2019

சாட்சி : DW–1

பெயர் : தங்கராஜ் தேதி: 07.04.2025

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

நீதிமன்றத்தில் பொய் சொன்னால் தண்டனை வழங்கலாம் என்று எனக்கு தெரியும். பாகம் கேட்டு வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியின் அம்மாவிற்கும் எனக்கும் 1978 இல் திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு வாதியின் தாயார் கர்ப்பினியாக இருந்தபோது நான் அவரை கொடுமை செய்து வீட்டில் இருந்து விரட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் எனது எதிர்வழக்குரையில் வாதி என் மகள் அல்ல என்றும், வாதியின் தாயாருக்கும் எனக்கும் திருமணம் ஆகவில்லை என்று சொல்லியுள்ளேன். எனக்கும், வாதிக்கும் DNA பரிசோதனை செய்யவேண்டுமென்று வாதி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

நான் சொல்வது தவறு என்றும் வாதி தாக்கல் செய்த மனுவில் நான் DNA பரிசோதனைக்கு போகமாட்டேன் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. அந்த மனு 2/2021 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுவில் நான் டிஎன்ஏ பரிசோதனைக்கு ஆஜராக மறுத்ததால் நான் தான் வாதியின் தகப்பனார் என்று நீதிமன்றம் முடிவு செய்துள்ளது என்றால் சரியல்ல. உயர்நீதிமன்றத்தில் வாதி மேல்முறையீடு செய்ததில் நான் தான் வாதியின் தகப்பனார் என்று உயர்நீதிமன்றமும் சொல்லியுள்ளது என்றால் சரியல்ல. உயர்நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்திருந்த மனு எண்.CRP.1005/2024 என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்து நான் சுயமாக சம்பாதித்த சொத்து.

தாவா சொத்து என் தாத்தா எனது அப்பாவிடமிருந்து எனக்கு வந்தது என்று சொன்னால் சரிதான். நான் எந்த சொத்தையும் பணம் கொடுத்து கிரயம் பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து பாகப்பிரிவினை மூலம் எனக்கு கிடைத்தது என்றால் சரிதான். வாரிசு இறக்குரிமை படி எனக்கு சொத்து கிடைத்தது என்றால் சரியல்ல. எனது அப்பா, தாத்தா சம்பாதித்த சொத்தை நான்எனது சுய சம்பாதிய சொத்து என்று பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் பாகபிரிவினை பத்திரத்தை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

எனது ஊர் கோட்டகவுண்டன்பட்டி. வாதி எந்த ஊரில் இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. வாதியின் அம்மா சரோஜா தலையாரியூரில் உள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. எனது ஊருக்கும், தலையாரியூருக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்று எனக்கு தெரியாது. எனது ஊருக்கும், தலையாரியூருக்கும் 15 கி.மீ துாரம் என்றால் அது எனக்கு தெரியாது. எனது ஊரில் என்னை விட சொத்து அதிகமாக வைத்துள்ள பலநபர்கள் உள்ளார்கள் என்றால் இருக்கலாம். என் சொத்தை அபகரிக்க வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று நான் பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் வா.சாஆ.1 இல் உள்ள தங்கராஜ் என்ற பெயர் என்னுடையது என்றால் சரியல்ல. வா.சாஆ.2 இல் உள்ள தங்கராஜ் என்ற பெயர் என்னுடையது தான் என்றால் சரியல்ல. வா.சாஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு பலவருடங்களுக்கு முன்பே ஏற்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நான் இரண்டாவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்துள்ளது சட்டப்படியானது அல்ல என்றால் நான் ஒரு திருமணம் தான் செய்துள்ளேன்.

எனது முதல் மனைவி சரோஜா என்றும் அவருக்கும் எனக்கும் இதுவரை விவாகரத்து ஆகவில்லை என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது.

எனது முதல் மனைவிடமிருந்து விவகரத்து பெறாமல் இரண்டாவது திருமணம் செய்துள்ளதால் இரண்டாவது மனைவிக்கும், அவரது வாரிசுக்கும் பூர்வீக சொத்தில் பாகம் இல்லை என்று சொன்னால் நான் ஒரு திருமணம் தான் செய்துள்ளேன்.

வாதி எனது மகள் என்பதால் தான் நான் டிஎன்ஏ பரிசோதனைக்கு வர மறுத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பூர்வீகசொத்து என்பதால் வாதிக்கு தாவா சொத்தில் பாதி பாகம் உள்ளது என்றால் சரியல்ல , தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/– L. Kalaivani,
III Additional District Judge,
Salem.